குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 50–2015

அ.சா. 5

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. ரவி |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.கண்ணன் |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 56 |

The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition.

**1873–ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. 17.02.2026**

**(1 முதல் 4 மற்றும் 6 முதல் 8 எதிரிகள் ஆஜர். 5ம் எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை :**

நான் ஊத்தங்கரையில் குடியிருந்து கட்டிடம் சென்டரிங் கட்டும் வேலை செய்து வருகிறேன். புகார் தாரர் சிவலிங்கத்தை எனக்கு தெரியும்,

அவர் எங்கள் ஊரைச்சேர்ந்தவர். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரியில் உள்ள முதலாவது சாட்சிக் கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்தை சென்டரிங் சீட் காணாமல் போனதின் சம்பந்தமாக கையெழுத்து செய்தேன். கடந்த 2015 அல்லது 2016ம் ஆண்டில் பேரிகை புக்காசாகரம் அரசு மேல் நிலைப்பள்ளியில் நான், சிவலிங்கம் மற்றும் சிலருடன் கட்டிட வேலை செய்துகொண்டிந்தபோது, சென்டரிங் சீட்டுகள் திருடு போய்விட்டது. இந்த வழக்கில் திருடு போன மறுநாள் பொருட்கள் திருடு போன அரசு பள்ளிக்கு வந்த போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து தயார்செய்தார்கள். அதில் நானும் குமரன் என்பவரும் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தோம். நான் கையொப்பம் செய்த ஆவணம் என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2 பார்வை மகஜர் ஆகும். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

நான் படிக்கவில்லை. எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியாது என்றால் சரிதான். யாராவது படித்து காண்பித்தால் மட்டுமே தெரியும் என்றால் சரிதான் இந்த வழக்கில் காணாமல் போய்விட்டதாக சொல்லும் சென்டரிங் சீட் எத்தனை என்னும் எவ்வளவு கனம் என்றும் தெரியுமா என்றால் 100 சீட்டுக்கும் மேல் இருக்கும். ஒரு சீட்டின் கனம் 15 கிலோ இருக்கும். ஆஜர் எதிரிகளை நான் பாத்தில்லை. அவர்களை எனக்கு தெரியாது. அ.சா.1 சிவலிங்கம் எனது நண்பர் என்றால் சரிதான். அவர் எனது ஊர்க்காரர் ஆவர்.. அ.சா. 1 புகார் அளிக்க காவல் நிலையம் சென்றபோது நானும் உடன்

சென்றேன். அது எந்த தேதி என்றால் ஞாபகமில்லை. எந்த வருடம் என்றால் 2015 அல்லது 2016 ஆண்டு இருக்கும். என்னிடம் போலீசார் கையெழுத்து வாங்கியபோது எழுதிய பேப்பரில் கையெழுத்து வாங்கினார்களா அல்லது வெள்ளை தாளில் கையெழுத்து வாங்கினார்களா என்றால் எழுதிய பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள். பார்வை மகஜரில் உள்ள விவரங்களை போலீசார் என்னிடம் படித்து காண்பித்தார்களா என்றால் படித்து காண்பித்தார்கள். அதில் என்ன எழுதப்பட்டிந்தது என்றால் சென்டரிங் சீட் காணமால் போனது சம்பந்தமாக எழுதியிருந்ததாக இருந்தது. காவல் நிலையத்தில்ௗ கையெழுத்து செய்தேனா என்றால் இல்லை. சம்பவ இடத்திலேயே கையெழுத்து செய்தேன். காணமால் போன சென்டரிங் சீட் ஒரு வாரம் கழித்து கிடைத்து விட்டது. சென்டரிங் சீட் கிடைத்து விட்டது என எனக்கு யார் சொன்னார்கள் என்றால் போலீசார் சொன்னார்கள். நான் பொய் சொலிகிறேன் என்றாலும், அ.சா.1 சிவலிங்கம் எனது நண்பர் என்பதால் அவருக்கு ஆதராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதைப்போல் சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்யவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் கையெழுத்து செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

**சாட்சி கூறியதனை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்.**

**(ஒம். /—ஆர். நரசிம்மமூர்த்தி,)**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 ஓசூர்.**